**செய்தி வெளியீடு எண்: 843** **நாள்:06.11.2020**

**<u>இன்று (6.11.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் குறித்தும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அறிவித்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாக இன்றைக்கு தமிழகம் முழுவதும் படிப்படியாக கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகத்தையே அச்சுறுத்தி, உலுக்கிக் கொண்டிருக்கிற ஒரு கொடிய நோய். இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தாலும், நம்முடைய மருத்துவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளித்ததன் காரணமாக குணமடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. வல்லரசு நாடுகளில்கூட இந்நோய்த் தொற்றை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையில், தமிழகத்தில் உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, மாநில அரசால் அமைக்கப்பட்ட மருத்துவ நிபுணர்கள் குழு ஆகியோரிடம் ஆலோசனைகளைப் பெற்று அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான முறையில் மருத்துவ சிகிச்சை அளித்தன் விளைவாகவும் இந்நோய்த் தொற்று படிப்படியாகக் குறைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் எண்ணிக்கை 2,500–க்கும் குறைவாக உள்ளது. அண்டை மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முதலில் மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் சற்று அதிகமாக இருந்தது. ஆனால், நாம் துரிதமாக,

சரியான நேரத்தில் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இன்றையதினம் இந்நோய்த் தொற்றுப் பரவல் குறைந்திருக்கிறது, கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நம்முடைய மருத்துவ நிபுணர்கள் வழங்கும் ஆலோசனைகளின்படி, அதிகளவில் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டதன் விளைவாக அதிகமான எண்ணிக்கையில் பரிசோதனைகளை செய்து, நோய் அறிகுறி தென்பட்டவர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளித்து அவர்களை குணப்படுத்தி இருக்கின்றோம். அதோடு, நடமாடும் மருத்துவக் குழுக்களும், அரசால் நியமிக்கப்பட்ட பணியாளர்களும் வீடு, வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து, மக்களுக்கு பரிசோதனைகள் செய்து, அறிகுறி தென்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்து, சிகிச்சை அளித்து, குணமடையச் செய்கிறார்கள். இவ்வாறு பல்வேறு வழிகளில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக நல்ல பலனைப் பெற்றிருக்கிறோம். மேலும், உரிய சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருத்துவமனைகளும், படுக்கை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேவையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் உள்ளன. அம்மாவின் அரசைப் பொறுத்தவரை, ஒரு உயிரைக்கூட இழக்கக்கூடாதென்ற நோக்கத்தில் எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகளின் அடிப்படையில், கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தமிழகத்தில் படிப்படியாகக் குறைந்திருக்கிறது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, ஏற்கனவே, 100 சதவிகிதப் பணியாளர்களை வைத்து பணி செய்யலாமென்று, சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பே அறிவிப்பு வெளியிட்டு, அதன்மூலம் வேளாண் பெருமக்கள் பணியாற்றியதன் விளைவாக நல்ல விளைச்சலைப் பெற்றுள்ளோம்.

திருப்பூர் மாவட்டம் தொழில் வளம் மிக்க மாவட்டம், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் மாவட்டம். இந்த மாவட்டத்தில் பின்னலாடைத் தொழில், பனியன் உற்பத்தி ஆலைகள் அதிகமாக உள்ளன. இந்த ஆலைகளில் பணிபுரிபவர்களில் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் உள்ளனர். கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டபோது, இங்குள்ள தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்ல

வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வைத்ததை ஏற்று, அவர்களை பத்திரமாக ரயில்கள் மற்றும் பேருந்துகள் மூலமாக அனுப்பி வைத்தோம். இந்நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாக குறைந்து வருவதால், அவர்கள் மீண்டும் தமிழகத்திற்கு வந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், அவர்களை அழைத்து வருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட காலத்தில், வெளிமாநிலத் தொழிலாளர்களுக்குத் தங்கும் வசதி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை, அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே விலையில்லா அரிசி, பருப்பு, எண்ணெய் என தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களையும் நன்கு பாதுகாத்தோம். அவர்கள் தங்குவதற்குத் தேவையான இடத்தை நானே தேர்வு செய்து, அவர்களுக்குத் தேவையான உணவு, உடைகள், மருத்துவ வசதி அனைத்தும் செய்து கொடுத்தோம். மாண்புமிகு அம்மாவின் அரசைப் பொறுத்தவரை தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற அனைத்துத் தொழிலாளர்களின் நலன் இந்நோய்த் தொற்றுப் பரவல் காலத்தில் பாதுகாக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து வைத்த கோரிக்கையை ஏற்று, திருப்பூரில் ரூபாய் **336.96** கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை உருவாக்கப்படும் என்று அறிவித்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் வேளாண் பெருமக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கால்நடைச் செல்வங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. அந்தக் கால்நடைச் செல்வங்களுக்கு சிகிச்சை அளிக்க கால்நடை மருத்துவக் கல்லூரி தேவை என்ற கோரிக்கையை ஏற்று, வாயில்லா ஜீவன்களையும் காக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மாவின் அரசு அதனையும் அமைத்துத் தந்திருக்கிறது. அதற்காக உடுமலைப்பேட்டை தொகுதியில் பண்ணைக் கிணறு கிராமத்தில் சுமார் ரூபாய் **85** கோடி

மதிப்பீட்டில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது, விரைவாக அங்கேயும் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், இந்த மாவட்ட மக்களின் கனவுத் திட்டமான அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினார்கள். அம்மாவால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் அம்மாவின் அரசால் சுமார் 1,652 கோடி மதிப்பீட்டில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்மூலம் வறட்சிப் பகுதியாக இருக்கின்ற திருப்பூர் மாவட்டம் செழுமையான பகுதியாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் மாநகராட்சியை சீர்மிகு நகரமாக உருவாக்குவதற்கு சுமார் ரூபாய் 948 கோடி மதிப்பீட்டில் மத்திய, மாநில அரசின் நிதியுதவியோடு இத்திட்டத்தை செயல்படுத்தவிருக்கின்றோம். இந்தத் திட்டத்தில் புதிய பேருந்து நிலையம், வாகனங்களை நிறுத்துவதற்காக Multicar Parking வசதியையும் உருவாக்க உள்ளோம். அதோடு, Conventional Centre உருவாக்க இருக்கின்றோம். அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்யக்கூடிய ஒருங்கிணைந்த வணிக வளாகம் கட்டித் தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இன்றையதினம் மூன்று பூங்காக்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, திருப்பூர் மாநகரம் பொலிவூட்டப்பட்டிருக்கின்றது. இப்படி திருப்பூர் மாநகரம் சீர்மிகு நகரமாக உருவாவதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவடைகின்றபொழுது, இந்த நகரம் மேலும் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திருப்பூர் மாநகராட்சியுடன் கூடுதலாக இணைக்கப்பட்ட பகுதிகளில் ரூபாய் 258 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு, தற்சமயம் சோதனை ஓட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அம்ருத் திட்டத்தின் மூலம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூபாய் 1,120 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டப் பணிகள் முழுவீச்சில்

நடைபெற்று வருகின்றன. ஆகவே, திருப்பூர் மாநகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

**காங்கேயம் என்று சொன்னால் காங்கேயம் காளைக்கு பெயர்போனது. அதன் நினைவாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் காங்கேயத்தில் காளை உருவச்சிலை ஒன்று அமைக்கவேண்டுமென்று வைத்த கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக, காங்கேயம் நகரத்தில் காவல்நிலையம் ரவுண்டானா அருகில் காங்கேயம் காளை உருவ சிலை ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**உடுமலைப்பேட்டை நகரம் நூற்றாண்டு கால சரித்திரம் படைத்திருக்கின்றது. உடுமலைப்பேட்டைக்கு அடிப்படைத் தேவையான குடிநீர் வசதி, தெருவிளக்குகள், சாலை வசதி, பாதாளச் சாக்கடை, பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், குளங்கள், அங்கன்வாடி மையங்கள், நகராட்சி சேவை மையங்கள் போன்றவற்றை மேம்படுத்திட மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பு நிதியாக ரூபாய் 50 கோடி வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

இப்படி பல்வேறு திட்டங்கள் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம்மாவட்டம் ஒரு தொழில்வளம் மிக்க மாவட்டம், வேளாண் பெருமக்கள் நிறைந்த மாவட்டம். இரண்டும் ஒன்றாக இணைந்த ஒரே மாவட்டம் திருப்பூர் மாவட்டம். இரண்டையும் மாண்புமிகு அம்மாவின் அரசு இரண்டு கண்களைப் போல பாதுகாத்து, இந்த இரண்டு வளங்களும் சிறப்பாக நடைபெற, அம்மாவின் அரசு துணை நிற்கும் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**